Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

[illegible] (1889) ஆவணி 28உ [illegible]

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ மாசி௴ உ௫ உ வெள்ளிக்கிழமை (8 MAR 1957) [இல-௬௭]

# ஆலய வழிபாட்டால்

## அடையும் பயன்

———:0:———

## அடியார்கள் மேற்கொள்ள வேண்டிய முறைகள்

கடவுளின் தன்மையை அறிவிக்கும் ஓர் குறியாய் விக்கிரகம் அமைவது பற்றியும் அது விளக்கும் பொருள்பற்றியும் அதை ஆலயங்களில் ஏன் எழுந்தருளச் செய்கின்றனர் என்பது பற்றியும் விளக்கம் கொடுத்தல் இன்று வேண்டப்படுகின்றது. என்றுமுள்ளவராகவினுலும்எல்லையின்றி அவர் எங்கும் வியாபித்திருப்பதனுலும், மக்கட் பிறவியினர் தங்கள் சிற்றறிவால் கடவுளை அறிய முடியாது. அவரை அறிதற்கு எமக்குக் கருவியாயுள்ளது மனதேயாகும். மனமானது நாமரூபங்களை ஆதாரமாகக் கொண்டே எதையும் நினைக்கத் தக்கது. ஆகையினுலே கடவுளைப்பற்றி நாம் சிந்தித்து மனத்திற் பதிக்க விரும்பினுல் அப்படிச் சிந்தித்துப் பதிப்பதற்கு உதவியாக அவருக்கு ஒரு பெயரும் உருவமும் கொடுக்கப்படுதல் வேண்டும். ஆலயங்களில் எழுந்தருளச் செய்யும் விக்கிரகம் இத்தேவையைப் பூர்த்தி பண்ணுகின்றது. அந்த விக்கிரகத்தின் சந்நிதியில் நாம் நிற்கும் பொழுது அவ்விக்கிரகத்தை இறைவனது திருவுருவமாகவே கருதுகின்ருேம். அத்திருச்சந்நிதியில் நின்று இறைவன் சிறப்புக்களையும் பல்வேறு திருப்புகழ்களையும் பாடுகின்ருேம்.

அந்த விக்கிரகமானது செய்யப்படும்பொழுது எதுவோ ஒரு உலோகத்தாற் செய்யப்படுவது உண்மையே. ஆனுல், அதை எழுந்தருளச் செய்யுங் காலத்திற் செய்யப்பெறுங் கிரியைகளால் அது அருட் சக்தியைப் பெறுகின்றது. ஓர் ஆலயத்தின் தூய்மையானது அதில் நாள்தோறும் பூசை செய்யும் குருக்களிலுள்ள நம்பிக்கை, கடவுட்பக்தி என்பவற்றில்தங்கியிருக்கின்றது. பூசைக் காலத்தில் ஓதப்பெறும் மந்திரங்கள் அருட் சக்தியுடையனவாயமைகின்றன. அம்மந்திரங்கள் ஆலயச் சூழலில் அமைதியையும் தூய்மையையும் உண்டாக்குகின்றன. இவ்வாறு ஆயிரக் கணக்கான அடியார்கள ஒன்றுகூடி அத்திருவுருவத்தில் நம்பிக்கையைப் பதிக்கும்பொழுது அதிலிருந்துண்டாகும் அருளொளியானது இயல்பாக வேமிகுந்துபெருகுகின்றது. அவ்வாறு நிகழுந் தருணத்தில் நம்பிக்கையுடைய ஒருவர் ஆலயத்துட் புகுந்து அத் திருவுருவத்தின் சந்நிதிக்குச் செல்வாரானுல், அவ்விடத்தில் அருளொளி பரந்து நிலவுவதை அவர் மிகத் தெளிவாகக் காணலாம். ஆகையினுலே இறைவனை அகத்திற் கண்டு வழிபட முடியாதவர்கள் அவரைப் புறத்திற் கண்டு வழிபடுதற்கு ஆலயம் அமைவதைக் காணலாம்.

ஆலயத்துட் சென்று யாவரும் கடவுளை வழிபடக் கூடியதாயிருத்தல் வேண்டும். ஆனுல் ஆலயத்துள் அமைந்துள்ள தூய அருள் நிலைமை எவ்வாற்ருனும் பழுதாக்கப்படக் கூடாது. ஆலயத்தின் அருட் சிறப்பு அங்கே வழிபடுவோர், அங்கே பூசை செய்யும் குருக்கள் ஆகிய இரு சாராரிலும் அமைந்துள்ள தூய்மையிலேயே தங்கியுள்ளது. கடவுளை வழிபடுதற்கு மாத்திரமே மக்கள் ஆலயங்களுக்குச் செல்லுதல்வேண்டும். ஆலயத்தில் வழிபடுவோரில் கடவுள்நம்பிக்கை, பயபக்தி ஆகிய பண்புகள் அமைதல் வேண்டும். கடவுளின் சந்நிதியில் நிற்பதற்கு வேண்டப்படுகின்ற அகப் புறத் தூய்மையும் ஒழுக்கமும் ஆலய வழிபாடு செய்வோரில் வேண்டப் படுகின்றன.

[ஆலயவழிபாடு பற்றி சுவாமி இராமதாசர் அவர்கள் வெளியிட்டிருக்கும் ஓர் உபதேசத்தின் சுருக்கம்.]

# பதுளை சைவபரிபாலனசங்கம் 31-வது ஆண்டறிக்கை

## மகிழ்ச்சிக்குரிய வளர்ச்சி

## சைவமக்களிடம்வேண்டப்படும்உதவி

பதுளை சைவ பரிபாலன சங்கத்தின் 31-வது ஆண்டறிக்கை, பல துறைகளில் மகிழ்ச்சிதரும் வளர்ச்சிகளைச் சைவ மக்களுக்கு அறிவித்தருகின்றது. கதாப்பிரசங்கங்கள் சமயக் கொண்டாட்டங்கள், இசை விருந்துகள், சரஸ்வதி வித்தியாசாலை, கோயில், நூல் நிலையம், விளையாட்டு ஆகிய ஒவ்வொரு துறையிலும் முன்னேறிச் சிறந்த சேவைகளைச் சங்கம் செய்திருக்கின்றது. "ஒரு சமயஸ் தாபனத்திடமிருந்து எதிர்பார்க்கக் கூடியதிலும் பார்க்க விசேடமாகப் போற்றக்கூடிய அளவில் சங்கம் பல துறைகளிலும் ஒழுங்காகக் கடமையாற்றி வருகிறதென்பது மறுக்கமுடியாத உண்மை" என்று அறிக்கையிற் கூறப்பெற்றிருப்பதை, அறிக்கையை வாசிக்கும் எவரும் ஆதரிக்காமலிருக்க முடியாது.

மேலே குறிப்பிட்ட பகுதிகளிலாற்றப்பெற்ற தொண்டு மகிழ்ச்சிதரும் முறையிற் சிறந்திருப்ப, சங்கம் அமைக்குமாறு முன்வந்த இந்துக்கல்லூரி ஒன்றுமாத்திரம் விரும்பியவாறு அமைந்து வளர முடியாது தடைப்பட்டது. அவ்வாறு தடைப்பட்டதற்குள்ள காரணங்களுள் ஒன்று சுவெசுக் கால்வாய்ப் பிணக்கால் ஏற்பட்ட கட்டடப் பொருள்களின் விலையேற்றமெனக் குறிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாற்ருனுந் தவிர்க்க முடியாத தொன்ருகும். மற்றது, கல்லூரிக்கு நன்கொடையளிக்க முன்வந்த சைவப்பெருமக்களிடமிருந்து உரிய காலத்தில் குறித்த நன்கொடைகளைப் பெற முடியாமை என அவ்வறிக்கை கூறுகின்றது. வாக்களித்தபடி குறித்த நன்கொடைகளைத் தந்துதவுமாறு சைவப் பெருமக்களைச் சங்கம் இப்பொழுது வேண்டி நிற்கின்றது. சைவச் சமூகமானது பல துறைகளில் இன்று இன்னலுற்றிருக்கின்றதாகலின், எவ்வித இன்னலையும் நீக்குதற்குதவும் சமயக் கல்வியைப் பிள்ளைகளுக்கு ஊட்டுதற்குதவிபுரிதல் சைவ நன்மக்கள் கடனுகுமென்பது சொல்லாமலே யமையும். சங்கம் வேண்டி நிற்கின்றவாறு வேண்டிய உதவியைச் சைவப் பெருமக்கள் புரிவார்களாக.

—0—



# அமைச்சர்கள் தலைவனின் அகந்தைப் பேச்சு

———0———

## காலி அங்கத்தவர் முன் கண்டறியாத அரசியல் வீரர்

—0—

## கட்சிக் கூட்டங்களிற் கருத்துகளின் மரபு

அரசியற் கட்சிக் கூட்டங்களுக்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆவலுடன் செல்லுகின்ருர்கள் என்று செய்தித் தாள்கள் கூறுகின்றன. இது உண்மை. இந்த வேட்கைக்குக் காரணம் காரசாரமான கண்டனத்தைக் கேட்டு ஆனந்தங் கொள்ளும் நோக்கந்தான். வசை மொழியும் பழியுரையும் கேட்டு வருவதால் மக்கள் பண்பாடு தக்கமுறையில் அமைந்துவிடும் என்று எண்ணுகின்ற அரசியல்வாதிகளின் காலத்தில் நாட்டின் முன்னேற்றம் எப்படி இருக்கும் என்பதை காலந்தான் காட்டி வைத்தல் வேண்டும். காலியிலே பிரதமர் பண்டாரநாயக நிகழ்த்திய கண்டனப் பிரசங்கத்தைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ!

ஆதிக்க வெறி பிடித்த அந்நியர் ஆட்சிக்காலத்திற் கூட 'சிறைவைப்போம் செருக்கடிக்குவோம்' என்ற எச்சரிக்கைகள் அவ்வளவாயிருக்கவில்லை. இப்பொழுதோ 'காவற் கூடத்திற் கட்டிவைப்போம், கர்வபங்கஞ் செய்வோம்' என்பதுதான் இந்நாட்டின் ஆட்சியாளர்களின் நாளாந்தரப் பேச்சாய் விட்டது கொத்தலாவலைக் கொக்கரிப்பும் பண்டாரநாயக பல்லைக் கடித்தலும்தான் இலங்கையின் அரசியற் பண்பாடாகும்!

தலைமை அமைச்சரின் நிலைமையைப் பார்த்தால் பயத்தினுல் நரம்புத் தளர்ச்சி யடைந்தவர்களுக் குண்டாகும் சன்னி வியாதித் தன்மையோஎன்றுஎண்ண வேண்டியிருக்கின்றது.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# தமிழ் மறைத் தொண்டர் முன்னணி

ஓரின மக்களின் வாழ்வு உயர்வடைந்து சீரும் சிறப்பும் பெறுதற்குச் சமுதாயச் சீர்திருத்தம் இன்றியமையாதது. மாறி மாறி அமையும் சமுதாய அமைப்புக்கேற்ப என்றும் நிலைத்து நிற்கும் அடிப்படை உண்மைகளைத் தழுவிச் சமுகத்தொண்டினைச் செய்வதாலேயே சமுதாயஞ் சீர்திருந்தும். இவ்வாறு சமுகத்தொண்டினைச் செய்வதற்குப் பேரார்வங் கொண்ட இளைஞர்கள் பலர் இப்பொழுது நம் நாட்டிலுளர். இவர்கள் யாவரும் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாய் ஓரியக்கத்தைச் சேர்ந்து முயன்ருலன்றிச் சமுதாயச் சீர்திருத்தத்தை உண்டாக்கி நிலைக்கச் செய்தல் முடியாது.

எனவே, இத்தகைய இளைஞர்கள் ஒன்றுபட்டுழைத்தற்கு வாய்ப்பளித்தற்காகத் தொண்டர் முன்னணி எனும் இயக்கத்தைத் தொடங்குதற்குத் தமிழ்மறைக் கழகம் முடிவுசெய்துளது. இம் முன்னணியிற் சேர்ந்து உழைக்க விரும்புவோர் சாதிசமய வேற்றுமைகளைப் பொருட்படுத்தாதவர்களாகவும் சமரச மார்க்க நெறியில் உறைப்பான பற்றுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இம்முன்னணி தமிழ்மறைக் கழகத்தின் ஓர் உறுப்பாக அமைந்து தொண்டாற்றும். தமிழ்மறைக் கழகத்தின் துணைச்செயலாளர் இம் முன்னணியில் செயலாளராகக் கடமையாற்றுவார். இம் முன்னணியினர் செய்யவேண்டிய பணிகளைத் தமிழ்மறைக் கழக ஆட்சிமன்றம முடிவு செய்து அறிவிக்கும். இலங்கையில் உள்ள ஊர்கள் யாவற்றிலும் கிளைகளை நிறுவி அரசியல் தவிர்ந்த மொழி, கலை, பண்பாடு, பொருளாதாரம் முதலிய பல துறைகளிலும் நாட்டுக்குத் தொண்டாற்றிச் சமுதாயச் சீர்திருத்தத்தை உண்டாக்குதற்கு இம் முன்னணி முயலும். இத்துறைகளில் உழைக்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## எங்கள் அறிவித்தல்

பங்குனி 2உ வெள்ளிக்கிழமை (15-3-57) வண்ணை வைத்தீசுவரன் கோயில் தேர்த் திருவிழாவின்பொருட்டு சைவபிரகாச அச்சுயந்திரசாலையும், இந்துசாதனக் காரியாலயமும் மூடப்பட்டிருக்குமென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

—அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

யாழ். துர்முகி ஸ்ரீ மாசி மீ உடு உ வெள்ளிக்கிழமை

## சனநாயக மனப்பான்மையாம்!

தமிழ்மொழிப் பாடசாலைகளிலே சிங்களத்தைப் பாடமாகப்புகுத்துவதற்கும் ‘சிங்கள மொழி’ ஆசிரியர்களை நியமிப்பதற்கும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும் நோக்கத்துடன் கல்விச் சட்டத்தைத் திருத்துவதற்கு ம. ஐ. முன்னணி ஆட்பலம் உதவியளித்திருக்கின்றது. சட்டம் திருத்தப்பட்டதல்ல வியப்பு. அதை ஆதரித்துப் பேசிய பிரதமரும் ஏனையோரும் சனநாயகக் கொள்கையைப்பற்றிக் கொடுத்த விளக்கமும் தமிழ்பேசும் மக்களுக்கு அளித்த ஆறுதலுமே ஆச்சரியத்தை விளைவிக்கின்றன. பெற்றோர் மாணுக்கர் விரும்பியதை ம. ஐ. மு. அரசாங்கம் முற்றாய் வழங்கும் சனநாயக மனப்பான்மையுடையதாய் விளங்குகின்றது என்று திரு. பண்டாரநாயக விளக்கிக் கூறியிருக்கின்றார். தமிழ்பேசும் மக்கள் பிளவின்றிப் பிணக்கின்றி ஒரே குரலிலே மொழிச் சம உரிமையை வழங்குங்கள் என்று வேண்டும் பொழுது சனநாயக ஞானம் எங்கே மறைந்துவிடுகின்றது என்று நாம் தலைமை அமைச்சரைக் கேட்கின்றோம். நானூறு மாணுக்கர் உள்ள பாடசாலையில் எண்பதின்மர் பெற்றோர் கேட்கும் வரத்தைக் கொடுக்கும் அரசியற்றெய்வம் பன்னூறாயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்களின் உரிமை வேண்டுகோளுக்குச் செவிசாயாதிருப்பது சனநாயகத் தனிஞானமா?

‘தமிழ்மொழி’ மாணுக்கர்களுக்குசிங்களம்கற்கும் வசதிகளை உண்டாக்குவதென்றால் சிங்கள ஆசிரியர்களுக்கு உத்தியோக இடம் தேடுவதாகும் என்பதைப் பற்றியும் நாம் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. ‘சிங்கள மொழி’ மாணுக்கர்கள் தமிழ் கற்பதற்கு ஏன் வசதிகள் உதவப்படவில்லை. தமிழ் ஆசிரியர்கள் ஏன் அப்பாடசாலைகளிலே இடம் பெறக்கூடாதுஎன்ற கேள்விகளைப்பற்றிப் பிரதமர் ஆலோசிப்பதாகக் கூறிவிட்டால் நிலைமை சீரடைந்து விடுமா? தனி ஆட்சி நடத்தும் சிங்கள வகுப்புவாதக் கட்சித் தலைவர் திரு. பண்டாரநாயக, சனநாயகக் கொள்கையாம் பசுத்தோற் போர்வையிற் புகுந்து நின்று புலிப்பாய்ச்சல் செய்து வருகின்றார் என்பது நாளுக்கு நாள் நன்கு புலப்படுகின்றது. ‘வேங்கை வரிப்புலிநோய்த் தீர்த்தவிடகாரி ஆங்கதனுக்காகாரம் ஆனாற்போல்’ அரசியற் குழப்பமென்னும் சேற்றிற்சிக்கி ஆற்றாதுநிற்கும்பிரதமர் ‘நியாயமான அளவு’ தமிழ் மொழிக்கு நிலைமை தருவேன் என்று கூறித் தமிழகத்தின் உதவியைப் பெற்றுவிட்டு தமிழினத்தையே இரையாக்கும் நோக்கமாக நாடகம் நடிக்கின்றார் என்பதை எல்லாரும் அறிந்துவிட்டார்கள்.

# இந்தியத்தேர்தல் வெற்றி விபரங்கள்

:O:

சட்ட சபைகள்

| மாகாணங்கள் | மொத்த இடங்கள் | ஒருகட்சி ஆட்சிக்குத் தேவையான இடம் | முடிவுதெரிந்தவை | இந்திய தேசிய (காங்கிரசு) மகாநாடு | பொதுவுடமை | மக்கள் சமூகம் | சனசங்கம் | பிற கட்சிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 205 | 103 | 35 | 24 | 1 | | | * 10 |
| கேரளம் | 126 | 64 | 29 | 12 | 9 | 7 | | 1 |
| மைசூர் | 208 | 105 | 46 | 40 | | 2 | | 4 |
| அசாம் | 108 | 55 | 61 | 45 | 2 | 4 | | 9 |
| ஒரிசா | 140 | 71 | 25 | 13 | | 1 | | 11 |
| பம்பாய் | 396 | 199 | 65 | 48 | | 2 | 1 | 14 |
| ம. பிரதேசம் | 288 | 145 | 145 | 116 | | 4 | 9 | 15 |
| பீகார் | 318 | 160 | 5 | 4 | | 1 | | |
| உ. பிரதேசம் | 430 | 216 | 98 | 68 | | 13 | | 16 |
| பாஞ்சாலம் | 154 | 78 | 72 | 59 | 3 | 1 | | 9 |
| இராசஸ்தானம் | 176 | 89 | 18 | 17 | | | 1 | |
| மே. வங்கம் | 252 | 127 | 4 | 1 | | 1 | | 2 |

* தி. மு. க. வெற்றி 2. இதில் அடங்கியுள்ளது.

மக்கள் சபை

தெரிவு செய்யப்பட்ட தொகை 26. இந்திய தேசிய மகாநாடு 23. பிற 3.

## தமிழ்மறைத் தொண்டர் முன்னணி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் பிற நிலையங்களுக்கும் ஆதரவு அளிக்கும்.

இன்றைய தமிழ் இளைஞர்களின் எழுச்சியும் புத்துணர்ச்சியும் நமமினத்தின் நாளைய வாழ்வை வளப்படுத்தும் என்பதைக் கூற வேண்டியதில்லை. எனவே, ஒன்றுபட்ட கொள்கையுடைய இளைஞர்கள் யாவரையும் இம்முன்னணியிற் சேர்ந்து உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சேர விரும்புவோர் தமிழ் மறைக் கழகம் 18/2 அத்தியடி வீதி. இரத்மலானை எனும் முகவரிக்கு எழுதுக என்று திரு. இ. சி. சோதிநாதன் செயலாளர், தமிழ் மறைக்கழகம் தெரிவிக்கின்றார்.

# குன்றக்குடி அடிகளின் வருகை

## பத்திரிகைகளில் வெளிவந்த பொய்ச் செய்திகள்

## மறுப்பும் வேண்டிய விளக்கமும்

**குன்றக்குடி அடிகளார் 14-3-57 மாலை 6 மணி வரையில் யாழ்ப்பாண விமானநிலையத்தில் வந்து சேர்வார்கள். 15-ம் 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அருள்நெறி விழாவில் பங்கு பற்றுவார்கள். பின்னர் தென்னிலங்கைக்குச் செல்லுவார்கள்.**

அடிகளாரைப்பற்றித் தவறான செய்தி சமீபத்தில் பத்திரிகைகளில் வெளிவந்தது. அது முழுவதும் பொய். அடிகளார் ஆதீனத்தைவிட்டுறந்து, அருள் நெறித் திருக்கூட்டத்தினின்றும் நீங்கி விட்டதாகப் பொய்ச் செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிட்டன. இது ஈழத்தில் பெரிய பரபரப்பை உண்டாக்கியது இதைப்பற்றித் தமிழகத்தில் விசாரித்தபோது உண்மை வெளிவந்தது.

21-2-57-ல் குன்றக்குடி ஆதீனத்தில் இருந்து பொன்னம்பலத்தம்பிரான் அவர்கள் இலங்கை அருள் நெறி இயக்கத்தினருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது: “.... .. .... 20-2-57 இரவு வினோபாஜி அவர்களுடன் தவத்திரு அடிகளார் அவர்கள் மேற்கொண்ட யாத்திரை வெற்றியுடன் முடிவுற்றது தவத் திரு. அடிகளாரின் சிறந்த பணியால் 10:00 ஏக்கர்வரை நிலமும் 20000 ரூபாவரை பணமும் இயக்கத்துக்குக் கிடைத்துள்ளது ....... ...”.

மதுரையிலிருந்து வெளியாகும் “தமிழ்நாடு” என்ற தினசரியின் உதவி ஆசிரியர் திரு. எம். எஸ். பி. சண்முகம் அவர்கள் இலங்கை அருள்நெறி இயக்கத்துக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது. “... .... அடிகளாரைப் பற்றி பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவறானவை. இந்தியாவில் யாரோ விஷமத்தனமான திரிப்புவேலை ஒன்று இத்தொடர்பிற் செய்திருக்கிறார்கள்.”

தவத்திரு அடிகளார் அவர்களுடைய அந்தரங்க காரியஸ்தர் குன்றக்குடியிலிருந்து 22-2-57-ல் பின்வருமாறு எழுதியுள்ளார்கள். 21-2-57-ல் சில பத்திரிகைகளில் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி அடிகளார் அவர்கள் (ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரியார்) தங்கள் ஆதீனத்திலிருந்தும் அதைச்சார்ந்த நடவடிக்கைகளிலிருந்தும் விலகியிருக்கப் போவதாக பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி செய்தி முற்றிலும் தவறானது.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# அணிந்துரை அரங்கம்

## திருவாதவூரர் புராணவுரை

முத்தாந்தவீதிமுளரிதொழு [மன்பருக்கே
சித்தாந்த வீதி வருந்தேவே பராபரமே.

சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருவாதவூரடிகள் எனப்படும் மாணிக்கவாசகப் பெருமானின் சரித்திரத்தைத் தனியாகவும் விரிவாகவும் கூறுவது கடவுள் மாமுனிவர் அருளிய திருவாதவூரடிகள் புராணமாகும். இப்புராணம் மற்றைய புராணங்கள்போல் கற்பனை மாதர் சிறப்பு முதலியவையில்லாமல், சிவசின்னங்கள் சிவசாதனங்கள், திருவாசகம், திருக்கோவையார் மகிமைகள், சிவஞான போதம், சிவஞான சித்தியாரின் சித்தாந்தக் கருத்துக்கள், சிவாகம இரகசியங்கள் முதலியவற்றை மிகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் காட்டுகின்றது.

இச்சிறிய நூல் மார்கழி மாதம் தோறும் நிகழும் திருவெம்பாவைப் பூசையில் பல சிவாலயங்களில் ஓதப்பட்டும் உரைப்பாடஞ் சொல்லப்பட்டும் வருகின்றது தெரிந்ததே. இந்நூலின் பொருளை நன்கறியும்படி சில பண்டிதர்கள் உரை எழுதியுள்ளனர். அவற்றுட் சிறந்தவை உரையாசிரியர் யாழ்ப்பாணத்து மட்டுவில் க. வேற்பிள்ளை 60 ஆண்டுகளுக்கு முன் எழுதிய விருத்தியுரையும் மகாவித்துவான் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் 40 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய புதிய சிற்றுரையுமாம்.

உரையாசிரியர் வேற்பிள்ளையின் விருத்தியுரை மூன்றும் பதிப்பாக அவர்களது மூத்த மகனுர் பண்டிதர் வே. திருஞானசம்பந்தப் பிள்ளையால் (பழைய ‘இந்து சாதன’பத்திராதிபர்) 1939ல் அச்சிடப்பட்டது. அப்பிரதிகள் செலவழிந்தமையால் உரையாசிரியரின் மற்றுமோர் மகனுர் உபாத்தியாயர் வே. நடராசா B. Sc. B. T. வேண்டுகோளின்படி சென்னையிலுள்ள நாவலர் அச்சுக்கூடப் பிரசுரமாக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தருமபரிபாலகராகிய ச. பொன்னுசாமி அவர்களால் உரையாசிரியரின் சரித்திரம் உருவப்படம் முதலியவற்றோடு அச்சிட்டு நான்காம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இவ்வுரை நூல் 50 ஆண்டுகளுக்குமுன் பெரும்புலவர்களாய் விளங்கிய வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை புலோலி வ. கணபதிப்பிள்ளை, சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் முதலியோர்களால் போற்றப்பட்டது. அவர்களுடைய சிறப்புப் பாயிரங்களால் அறியலாம். சிவநேயர்கள் இவ்வுரைநூலைப் படித்து இன்புறுவார்களாக. பிரதியின் விலை ரூபா 4-00.

தேனூறும் வாசகங்க
ளறுநூறுந் திருக் [கோவை
நானூறு மமுதூற
மொழிந்தருணாயகனை
வானூறுங் கங்கைநிகர்
மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை
யிருபோது மிறைஞ்சி [டுவேன்

சே. வெ ஜம்புலிங்கம்பிள்ளை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# இந்திய தேசிய மொழி

## கலாநிதி சி. வி. இராமன் வெளியிடும் கருத்து

'சம்ஸ்கிருத மொழியையே இந்திய தேசிய மொழியாக்க வேண்டும்.

இந்தியா ஆங்கிலத்தை முற்றிலும் கைவிட்டுவிடக் கூடிய காலம் ஒன்று வருமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆங்கிலத்துக்கு அடுத்தபடியான முக்கியத்துவமுடையது சமஸ்கிருதம். நாட்டின் நாகரிகம் அனைத்தும் அம்மொழியில் தான் புதைந்து கிடக்கிறது. தேசிய மொழியாக்குவதற்கு இந்தியைக்காட்டிலும் சமஸ்கிருதம் அதிகம் பொருத்தமானது. சமஸ்கிருதம் நமது இரத்தத்தில் ஊறிய மொழி. அந்த மொழியொன்றால்தான் நாடு ஒற்றுமையுடன் ஒரு வழி செல்ல முடியும். இந்த உண்மையை அரசாங்கத்தார் உணர்ந்து ஊக்கமளிப்பார்களானால் நாளடைவில் அது ஆங்கிலம் வகித்த இடத்தை வகிக்க வாய்ப்பு ஏற்படும். சமஸ்கிருதம் மக்கள் மொழியாக வேண்டும் என்று கலாநிதி சி வி. இராமன் அவர்கள் ஐதராபாத்திற் பேசும் போது கூறினர். இப்பேச்சை ஒழுங்கு செய்த வடமொழி வளர்ச்சிக் குழுவினர் இவர் வெளியிட்ட கருத்தை ஓர் அறிக்கை வடிவத்தில் வெளியிட்டிருக்கின்றனராம்.

# அரசியலில் எதிர்க்கட்சி

## ஒழுங்கை நிலைநாட்ட இன்றியமையாதது

ஸ்ரீ சி. இராசகோபாலாசசாரியார் அவர்கள் கலாநிதி சி. விஜயருகவாச்சாரியர் நினைவுவிழாப் பேச்சொன்றைச் சேலத்தில் நிகழ்த்தினர். சனநாயக ஆட்சியில் எதிர்க்கட்சியின் நிலைமைபற்றி அப்பேச்சில் அவர் விளக்கினர். அவருடைய பேச்சின் சாரம் பின் வருமாறமைகின்றது:—

உடன்தேவையை மனத்தில் வைத்து நான் பேசவில்லை. ஐந்து வருடங்களுக்குப் பின் வரக்கூடியது என்ன என்பதை மனக்கண்ணாற் பார்த்து அதற்குத் தக்கதையே நான் சொல்லுகிறேன். ஒரு தோட்டத்தில் ஒரு வித்திடப்படுவது, அது அடுத்த நாள் இரவுக்கு உணவு தரும் என்று கருதியல்ல. இந்திய தேசிய மகாநாட்டார் இன்று ஆளுங் கட்சியினராகின்றனர். பல மாகாணங்களில் இந்திய தேசிய மகாநாட்டாரே இப்பொழுது நடக்கும் தேர்தலில் வெற்றி பெறுவர். வேறு கட்சிகளுமிருக்கின்றன அவை மிகுந்த வேறுபாடுகளுடையவை. ஆயினும் நாட்டின் நலனே எல்லோரும் கருதுவதாகும்.

கட்சி அரசியலானது ஒரு விளையாட்டில் கட்சியாய்ப் பிரிந்துநின்று விளையாடுவதை ஒக்கும். கட்சிகளுக்கிடையில் பகைமையிருப்பதில்லை. ஒருபோட்டி விளையாட்டு நிகழ்ந்து முடிந்தபின் அதைப் பற்றிய பேச்சேயில்லை. ஒரு விளையாட்டைப் போல் எல்லா வழியிலும் அரசியல் அமையாதிருக்கலாம். ஒருவிளையாட்டு ஒருமுறை விளையாடி முடிவடைகின்றது. ஆனால் அரசியலில் அப்படி முடிவடைவதில்லை என்பது உண்மைதான். ஒருமுறை தோல்வியுற்ற கட்சி மற்றொருமுறை வெல்லுதல் கூடும்.

சனநாயக அரசியலில் எதிர்க் கட்சியின் நிலைமை என்ன என்பதைச் சில பெருமக்களே விளங்காமலிருக்கின்றனர். ஆளுங்கட்சிக்கு எல்லாக் காலத்திலும் எதிர்க்கட்சியிருத்தல்வேண்டும். நான் ஒரு காலத்தில் இந்திய தேசியக் கட்சியில் இருந்தேன். அக்கட்சி தோற்றியிருந்தால் எதிர்க் கட்சி அமைக்கும் முயற்சியில் ஒருசிறிதும் ஊக்கமின்றி இருந்திருக்க மாட்டேன். "மக்களின் அனுதாபம் எங்களுக்கிருக்கின்றது. உங்களிடமிருந்து அரசாங்கத்தைக் கைப்பற்றி நாங்கள் நன்கு நடத்துவோம்" என்று ஆளுங் கட்சிக்கு எதிர்க்கட்சி எப்பொழுதும் சொல்லக் கூடியதாய் இருத்தல் வேண்டும். அப்படிச் சொல்லக்கூடிய கட்சி என்றும் வளர்ந்து வருவதொன்றாயிருத்தல் வேண்டும்.

எதிர்க் கட்சியானது ஆளுங் கட்சியின் செயல்களை எப்பொழுதும் அவதானித்தபடியே யிருக்கவேண்டும். எதிர்க்கட்சியின் எதிர்ப்பு இல்லாவிட்டால் ஆளுங்கட்சி சர்வாதிகாரமுடையதாகிவிடும்.

சென்ற பொதுத் தேர்தலில இந்திய தேசிய மகாநாட்டார் தங்கள் வலிமையில் மிகுந்த நம்பிக்கையுடையவர்களாயிருந்தமையால் சிறிது சோர்வாயிருந்தனர். இப்பொழுது தகுந்த எதிர்ப்பிருக்கின்றது. ஆகையினாலே அவர்கள் இப்பொழுது மிகுந்த ஊக்கமுடையவர்களாயிருக்கின்றனர். ஒழுங்கீனம, பொய் ஆதியவை வெளிப்படுத்தப் படுமென்ற அச்சமிருக்கின்றது. சென்ற பத்து ஆண்டுகளாக இந்திய தேசிய மகாநாடு நன்மதிப்பில் வளர்ந்துகொண்டே வருகின்றது.

எதிர்க் கட்சியானது ஆளுங் கட்சியின் பிழைகளை எடுத்துக் காட்டும். பிழைகள் தொடர்ந்து நடந்தால அடுத்த தேர்தலில் அதிகாரம் கைப்பற்றப் படும் என்பதை அறிவுறுத்தி வரும்.

—

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## பெரியபுராணம்

### சுந்தரமூர்த்திநாயனர் புராணம்

சுந்தரமூர்த்தி நாயனர் புராணத்தில் இதுவரை மூன்று பாடங்கள் படித்தீர்கள். இப்புராணத்தின் இறுதிப்பாடம் இது. கடந்த மூன்று பாடங்களிலும், நாயனர் அநிந்திதை, கமலினி, இவர்களின் முற்பிறவி, பூவுலகில் அவர்கள் உதித்தமை, காரணங்கள், திருத் தொண்டுகள் புரிந்தமை, நாயனர் புரிந்த அற்புதச் செயல்கள், அச்செயல்களுக்கு இறைவன் திருவருள் பாலித்தமை முதலியனவும் பிறவும் பற்றி நன்கு அறிந்துகொண்டீர்கள். இனி எஞ்சிய பகுதியையும் தொடர்ந்து படிப்போம்.

### திருமுருகன் பூண்டித் திருவிளையாடல்

சேரமானும் சுந்தரரும் இப்பொழுது கொடுங்கோளூர் என்னுந் தலத்தில் இருக்கின்றனர். இங்ஙனம் இருக்கு நாளில சுந்தரருக்கு ஒருநாள வன்மீக நாதரின் நினைவு, திருவாரூர் நினைவு வந்துவிட்டது. உடனே "பொன்னுமெய்ப் பொருளும்" என்று பதிகம் பாடிக்கொண்டு திருவாரூருக்கு வழிக்கொண்டார்.

சேரமான் செல்லவிடாது தடுத்துப் பார்த்தார். முடியவில்லை. தமது திரவியங்களையெல்லாம் கட்டிப் பரிசனங்கள் மூலமாகச் சுந்தரமூர்த்திக்கு முன்னரே அனுப்பிவிட்டார் திருவாரூருக்கு. திருமுருகன் பூண்டி ஒரு தலம். அதற்கூடாகச் செல்லும் போது பூதகணங்கள் வேடராகித் திரவியங்களையெல்லாங் கவர்ந்தன. அறிந்தார் சுந்தரர். அவருக்குப் பெரிய ஆத்திரம்! உடனே கோயிலிற் சென்று 'கொடு வெஞ்சிலை வடுக வேடுவர்" என்று பாடத் தொடங்கினர். அவ்வளவுதான். வேடுவர்கள் திரவியங்களைக் கொணர்ந்து வைத்து வணங்கி அகன்றனர். திரவியங்களோடு போய்விட்டார் திருவாரூருக்கு.

### அவிநாசியப்பனின் அளப்பிலா அருள்பெறல்

பின்னர்ச் சேரமானை நினைத்துவிட்டார் ஒருநாள். நினைத்தவுடன் புறப்பட்டார். வழியில் திருப்புக்கொளியூர் என்று ஒரு ஊர். அங்கு ஒரு வீட்டில மங்கலவொலி இன்னென்று அமங்கலவொலி. (மைந்தனொருவனுக்குப் பூணூற் சடங்கு செய்யும் ஒலி மங்கலவொலி, முதலையொன்றுக்குத் தம் மைந்தனைக் கொடுத்தவர்கள் சிந்தை வருந்திப் புலம்பும் ஒலி அமங்கலவொலி) நாயனர் விஷயத்தைக் கேட்டு அறிந்தார். மகவையிழந்த மறையவனும் மனைவியும் நாயனர் வரவையறிந்து வந்து வணங்கினர். "பெருமானே! நெடுங்காலமாகத் தேவரீரை நினைந்தோம் இன்று எங்கள் ஆசை தீர்ந்தது" என்றனர். இழந்துபோன குழந்தையை எண்ணாமற் தம் பொருட்டு அவர்கள் மகிழ்வதைச் சுந்தரர் கண்டார். அவர்களை அவிநாசிக்கு (முதலை பிள்ளையை விழுங்கிய இடம்) அழைத்துச் சென்றார். வாவிக்கரையிலே நின்று பதிகம் பாடினர். மூன்று திருப்பாட்டுக்கள் பாடிவிட்டார். நான்காந் திருப்பாட்டு "உரைப்பாருரையுகந்து" என்பது. அத் திருப்பாட்டு முடியுமுன் என்ன அதிசயம்! விழுங்கிய புதல்வனைக் கடந்தகால வளர்ச்சியோடு கரையிலே முதலை உமிழ்ந்துவிட்டது.

கண்ட தாய் ஓடிச் சென்று அணைத்து எடுத்தாள் குழந்தையை. நாயகனோடு நாயனர் திருவடியில் வீழ்ந்து வணங்கினள். தேவர்கள் பூமழை பொழிந்தனர். பிராமணர்கள் ஆரவாரித்தனர். பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். சுந்தரர் அவர்களுடன் வீடு சென்று அவனுக்கு உபநயனஞ் செய்வித்து ஆசீர்வாதமருளிவிட்டுக் கொங்குதேசங் கண்டு மலைநாட்டை அடைந்தார்.

### கொண்டலைக் கண்ட தோகையையொத்தார்

உயிர் கொடுத்த உத்தமர் வருகிறாரென்பதைச் சேரமான் அறிந்தார். ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார். நகரமெங்கும் அலங்கரிப்பித்தார். நாயனர் வருகையை நாடெங்கும் அறியச் செய்தார். வீதிகள் முதலான யாவையும் அலங்கரிப்பித்தார். யானையின் மேலேறி எதிர்நோக்கிச் சென்றார். கண்டார் சுந்தரர் தூரத்திலே வருவதை. மேகத்தைக் கண்ட மயில்போல ஆனார். யானையினின்றுங் குதித்தார். ஓடிச் சென்று வீழ்ந்து வணங்கினர். நாயனரை யானையின மேலே ஏற்றினர். தாமும் ஏறிப் பின்னல் இருந்தார். குடைபிடித்தார். ஊர்வலத்தோடு வீட்டுக்கு அழைத்துச் சென்றார். உபசரித்தார். இருவரும் யாத்திரைகள் பல புரிந்துகொண்டு இன்புற்று இருந்தனர்.

### திருவஞ்சைக்களத் திருக்கோயிலில் வீடுபேறு

அவ்வாறிருக்குங் காலத்தில் ஒருநாள் சேரமான் நீராடும் பொருட்டுச் சென்றார். சுந்தரர் திருவஞ்சைக்களஞ் சென்றார். அங்கு இறைவனை வணங்கித் தேவரீர்! அடியேனை இப்பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் நீக்கித் திருவடியிலே சேர்த்தருளவேண்டும்" என்னுங் குறிப்புடையராய்த் "தலைக்குத் தலைமாலை" என்னும் பதிகம் பாடினர். குறிப்புணர்ந்த இறைவன் (பக்குவ காலமும் வந்துற்றபடியால்) தேவர்களை நோக்கித் "தோழனாகிய சுந்தரனை வெள்ளை யானையின் மேல் ஏற்றிக் கொண்டு வாருங்கள்" எனப் பணித்தார். தேவர்கள்வந்தனர்திருவஞ்சைக் களத்துக்கு. நாயனரை வணங்கி ஏற்றிக்கொண்டு சென்றனர். சேரமானை நினைத்துக்கொண்டு சென்றார் சுந்தரர் போகும் போது. இதனை அறிந்தார் சேரமான். உடனேயேறினார் ஒருகுதிரையின்மேலே. ஓட்டம் பிடித்தார். திருவஞ்சைக் களத்துக்கு. அணைந்து பார்த்தார். போகிறார் சுந்தரர், ஓதினார் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை" குதிரையின் செவியில். குதிரை ஆகாயத்திலே பாய்ந்து வெள்ளை யானையை வலஞ் செய்து அதன் முன்னாகச் சென்றது.

இங்ஙனமாகச் சேரமான் செய்கையைப் பார்த்துக் கொண்டு நின்றனர் அவரது படைவீரர்கள். கண்ணுக்குப் புலப்படும்வரை பார்த்துக்கொண்டு நின்றனர். அவர்கள் சேரமானிடத்திலே திட பக்தி - நம்பிக்கை - உறுதி உடையவர்கள். அவர் மறைந்தவுடனே எடுத்தனர் தமது உடைவாட்களை. அவற்றினாலே தத்தம் உடம்புகளை உடைத்தனர். சேரமானுக்கு முற்பட்டு அவரை வணங்கிச் சேவித்துக் கொண்டு சென்றனர். சேரமானுக்கு முன்னாலே படைவீரர்கள். பின்னாலே சுந்தரர். சுந்தரர் "தானெனை முன் படைத்தான்" என்னும் பதிகத்தைப் பாடிக் கொண்டு சென்றார்.

திருக்கைலாயத்தின் தெற்கு வாயிலைச் சேர்ந்தனர் இருவரும். பலவாயில்களையுங் கடந்து திருவணுக்கன் திருவாயில் - இது திருக் கைலாயத்து முதல் திருவாயில். அதனைச் சென்று அணுகினர்.

[வளரும்.]

# தமிழ்ச் சர்வகலாசாலை

## மூன்று பட்டினங்களில் மூன்று கழகங்கள்

### அமைத்தற்கு வேண்டிய ஆதரவு மக்களளிக்க வேண்டும

தமிழ்ச் சர்வகலாசாலை அமைப்புக் குழுவினர் தங்கள் முயற்சியை ஊக்கத்துடன் மேற்கொண்டவர்களாய் மட்டக்களப்புப் பகுதிக்குச் சென்றனர். அக்கரைப்பற்றில் ஓர் பொதுக்கூட்டம் நடத்தப்பெற்றது.

அக்கூட்டத்தில் பேராசிரியர் ஸ்ரீ. சின்னத்தம்பி அவர்கள் பேசும்போது விளக்கிய பொருட்சுருக்கம் பின்வருமாறு: யாழ்ப்பாணத்தில் ஒன்றும், திருக்கோணமலையில் ஒன்றும், மட்டக்களப்பில் ஒன்றுமாய் மூன்று பிரிவுகளாகத் தமிழ்ச் சர்வகலாசாலை அமைக்கப்பெறும். யாழ்ப்பாணத்திற் பெரிய வைத்தியசாலையிருப்பதாற் சர்வகலாசாலையின் வைத்தியப்பகுதி யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும். தொழில் நுட்ப வசதிகள் திருக்கோணமலையிலிருப்பதால் தொழில் நுட்பப்பகுதி திருக்கோணமலையிலமைக்கப்படும். இட வசதியிருப்பதால் கலை, விஞ்ஞானப்பகுதி வந்தாறுமூலையிலமைக்கப்படும். இவற்றுள் தொழில் நுட்பக் கல்விக்கே சர்வகலாசாலை முதலிடம் கொடுக்கும்.

இன்றைய கல்வி பயனற்றதாயும் அத்திபாரமற்றதாயுமிருக்கின்றது. கல்லூரிகளை விட்டு வெளியேறியவுடன் மாணவர் உத்தியோக வேட்டையிலிறங்கி விடுகின்றனர் சிங்கள சனத்தொகை பெருகி வேலையில்லாத் திண்டாட்டமும் கூடியிருப்பதால் அவர்களுக்கே அரசாங்கம் வேலை கொடுக்க முயற்சிக்கின்றது. இந்த நிலைமையில் தமிழ் மக்கள் உத்தியோகத்தை எதிர்பார்க்க முடியாது. எங்கள் பிள்ளைகளுக்கு நாற்காலி உத்தியோகக் கல்வி பயிற்றக் கூடாது. தொழில் நுட்பக் கல்வியே பயிற்றுதல் வேண்டும். தொழில் நுட்பக்கல்வி கற்றாலே எம்மவர் எதிர்காலத்தில் இன்புற்று வாழக் கூடியதாயிருக்கும்.

எங்கள் சர்வகலாசாலையில் எல்லாப் பாடங்களும் பயிற்றப்படும். எல்லாப் பாடங்களிலும் கல்வி பயிற்றுதற்கு வேண்டிய தகுதிவாய்ந்த பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் எம்மவருள் இருக்கின்றனர்.

தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்துக்கு முதல் மந்திரி ஆதரவளியாது விட்டாலும் எங்கள் வருங்காலச் சந்ததியார் தாய் மொழியில் உயர்தரக் கல்வி பெறுதற்கு வேண்டிய வசதியை நாங்கள் நினைத்தாற் செய்து கொடுக்கலாம். ஆகையினாலே இச்சர்வகலாசாலை இயக்கத்துக்குத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தயவாலியன்ற உதவிபுரிவார்களென்று நம்புகிறேன்.

## திருவள்ளுவர் விழா

மேற்படி விழா அளவெட்டி சதானந்த வித்தியாலய முத்தமிழ் மாணவ மன்றத்தினரால் 18-2-57 திங்கட்கிழமை பிற்பகல் ஆசிரியர் நல்லதம்பி அவர்கள் தலைமையிற் கொண்டாடப்பட்டது. வள்ளுவரின் பெருமையைத் தலைவர் தலைமையுரையில் விளக்கினார். பின்பு வித்தியாலய மாணவ மாணவிகளின் திருவள்ளுவர் பற்றிய பேச்சுக்களும், கட்டுரைகளும், பாடல்களும் இடம்பெற்றன. ஆசிரியர் திரு. வே. சம்பந்தன் அவர்கள் "அரசியலும் வள்ளுவரும்" என்ற விஷயம் பற்றி சொற்பொழிவாற்றினார். "பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்" என்று வள்ளுவர் கூற, நாம் தகாநாயகாக்களை தகுநாயக்கா என்று கூறுகின்ற அரசியலின் கீழ் வாழ்கின்றோமே என்று கூறி இன்றைய அரசாங்கம் திருக்குறளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துச் சிங்கள மக்களுக்குக் கொடுத்து அரசியலில் நலல அறிவைப் புகுத்துவது புத்திசாலித்தனம் என்று அவர் பேசும்போது குறிப்பிட்டார். பின்பு ஆசிரியை செல்வி பொ. மகேஸ்வரி, ஆசிரியர் திரு. இ. முருகேசு மாணவன் வி. பத்மநாதன் ஆகியோர் குறிப்புரை கூறினர்.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி

—:—

யாழ்ப்பாண நகரசபைத் தலைவர்மீது நம்பிக்கை இல்லையென்று யாழ்ப்பாண நகரசபையிற் பிரேரிக்கப் பட்ட பிரேரணை மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெருமையால் தோல்வியுற்றது.

## இந்தியாவுடன் புது ஒப்பந்தம்

இலங்கை இந்திய பிணக்கைத் தீர்ப்பதற்குத் தகுந்த ஒரு புதிய ஒப்பந்தம் அணிமையில் இந்தியாவுடன் செய்யப்படும் என்று களனியாவில் ஓர் கூட்டத்திற் பேசும்போது சொன்னாராம் ஸ்ரீ ஆர். ஜீ. சேனநாயக. இலங்கை இந்தியர்களைச் சுட்டுக் கொல்லுதலே இப்பிணக்கைத் தீர்க்கும் வழி என்று இவர் முன்பு சொல்லியது இப்பொழுது குறிப்பிடப்படுகின்ற.

# கல்வித் தரம் குறைந்த காரணம்

—————:0:—————

### எதை எதைச் செய்தால் அதை உயர்த்தலாம்

இக்காலக்கல்வியின் தரம் குறைந்துவிட்டதென்பதை அறிஞர் பலர் ஒரேமனதாய் ஏற்கின்றனர். ஆனால் அதற்குக் கூறும் காரணங்கள் பல்வேறு வகைப்பட்டவையாயிருக்கின்றன. மதுரைக் கல்லூரியில் சுவாமி வண ஜெரோம் டிசௌசா அவர்கள் பேசும்போது தாம் கண்ட காரணங்களைக் கூறினார். அவருடைய கருத்துப் பொழிப்பு இங்கே காணவருகின்றது.

உயர்தரக் கல்விக்கு என்றுங்காணாத பெருந்தொகை மாணவர் முன் வருகின்றனர். அவர்களுக்கு வேண்டிய ஒழுங்கு செய்யுமாறு அரசாங்கம் வலியுறுத்துகின்றது. தகுந்த இடவசதி தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாதிருந்தும் நிலைமைமையைச் சமாளிக்க முயல்வது கல்வியின் தரம் குறைதற்கு ஒரு காரணமாகின்றதி.

முற்கால மக்கள், கலாசாலைத் திட்டமளவில் நில்லாது நூல் நிலையங்களைப் பயன்படுத்தி அறிவைப் பெருக்கினார்கள். இத்துறையில் வேண்டிய முயற்சிசெய்யப்படாமையும் மற்றொரு காரணமாயிருக்கின்றது. இக்காலப் பாடதிட்டம் மிகப்பரந்ததாயிருப்பதோடு படக் காட்சிகளிலும் விளையாட்டுகளிலும் இக்கால மாணவர் பெரும்பாலும்தங்கள் மனதைச் செலுத்துகின்றனர். மனத்தைத் தகுந்தவாறு பண்படுத்துவதற்குப் படக்காட்சி உதவுவதில்லை என்பதை மாணவர் மனத்திற் பதித்தல் வேண்டும். திட்டத்தின்படி தங்களுக்குள்ள பாடங்களுடன் மேலதிகமாக நூல்களை வாசித்தாலே கல்வியின் தரம் உயருமென்பதை மாணவர் அறிதல் வேண்டும்.

மக்கள் வாழ்க்கையின் இயல்பை அவர்கள் அறிதல் வேண்டும். மக்களுடன் கலந்து பழகி அவர்களுடைய மன நிலைமையை விளங்க வேண்டும். அவ்வாறு விளங்கி ஒற்றுமையாய் வாழப் பழகுதல் வேண்டும். இவ்வாறு பழகுதற்குதவும் பல நூல்களை மாணவர் வாசிக்க வேண்டும்.

ஒருவரோடொருவர்உயர்ந்தமுறையில் உரையாடுதல் மேடைமீதேறிச் சிறந்த பண்புடன் பேசுதல் ஆகிய துறைகளிலும் மாணவர் பயிலுதல் வேண்டும். இக்கால மாணவரின் கல்வித் தரம் உயர்வதற்கு இவை வேண்டப்படுவனவாகும்.

# விடுதலைபெறுதற்குவழி

### இறைவழிநின்று ஏற்றது செய்தல்

நாங்கள் தேடும் ஒளியானது — உண்மைப் பொருளானது—எங்களுக்குள்ளேயேயிருக்கின்றது. இவ்வுண்மையையுணர்ந்தே விடுதலை அடையலாம்; இதை உணர்ந்து விடுதலை அடைவீர்களாக.

இவ்வுலகிலேஎமக்கு ஆதரவுள்ளவர்களென நினைத்து யார் யாரைச் சார்ந்து நிற்கிறோமோ அவர்கள் எம்மைக் கைவிடுவது எமக்கு நன்மை தருவதொன்றாயிருக்கின்றது. ஏன் என்ற கேள்வி உடனே எழலாம். எமக்கு ஆதாரமாயுள்ளவர்களென நாம் நினைத்திருந்தவர்கள் எம்மைக் கைவிடும்போது நாம் இறைவன் திருவடிகளிற் சரணடைகின்றோம். ஆகையினாலே நாம் நம்பியிருந்தவர்கள் எம்மைக் கைவிடும் போதுண்டாகும் இவ்வனுபவம் நன்மை தருவதாகின்றது.

இறைவனே எமக்கு உண்மையான துணையாயிருக்கிறார். யாவருக்கும் அவரே புகலிடம். அவருடைய அருள்வழியை நீங்கி நாம் இடும திட்டங்கள் நிலைநிற்கமாட்டா. அவருடைய ஆணையை எதிர்பார்த்து அதற்கு நாம் அடங்கி நடக்க வேண்டும்.

இறைவன் எங்கள் இருதயங்களில் வசிககிறார். எங்கள் ஆபத்துக காலங்களில அவர் அங்கிருந்து அனுப்பும் அருட்கதிர்களே எம்மை வழிநடத்த வேண்டும். எங்கள் வாழ்க்கையில் எமக்குண்டாகும் நிலைமைகளுளெல்லாம் இறைவனே எம்மை வைததிருக்கின்றார்; அந்நிலைமைகள் எல்லாவற்றிலும் விருப்பு வெறுப்பு இன்றி எம் கடமையை நாம் செய்தல் வேண்டும்.

எங்கள் துன்பங்களுக்கு உண்மையாகவே வெளிப் பொருள்கள் காரணமல்ல. நாங்களே எல்லாவற்றையும் செய்கின்றோம் என்னும் அகங்காரத்தினாலேயே நாம் துன்புறுகின்றோம். எங்களை இறைவனிடம ஒப்புக் கொடுத்தலே எங்கள் விடுதலைக்குள்ள ஒரேயொரு வழியாகும்

இதைச் செய்தற்குப் பல்வேறு ஆசனங்கள் தேவையில்லை. வசதியாயுள்ள எந்த ஒரு ஆசனத்தை மேற்கொண்டாலும் அந்த ஒன்றுமே போதுமானதாகும். அந்த ஆசனத்திலிருந்துகொண்டு கடவுளைப் பற்றிய நினைவையே மனத்தில் நிறைக்க வேண்டும் மேன்மேலும் உள்ளே நோக்கி மனம் போய்க்கொண்டிருக்குமானால் சாதனைக்கு வேண்டிய புத்தகப முதலான புற உதவிகளின் தேவை இல்லாதொழிந்துவிடும்.

— சுவாமி இராமதாசரின் உபதேசப் பொழிப்பு

## சிங்களம் படிப்பிக்குப்படி வலியுறுத்தப்படுமாம்

அரசாங்க உதவிபெறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிற் சிங்களம் படிப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் சட்டமொன்றை அரசாங்கக் கட்சியார் உண்டாக்குதற்குத் தீர்மானித்திருக்கின்றார்களாம்.

## அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு

தமிழ்மறைக்கழகம் நடத்தும் அ. இ தமிழ் மறைத் தேர்வு 16-3-57-ல் இலங்கையில் 27 இடங்களில் நடைபெறும். தொடக்கப் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நாலு பிரிவுகளாகத் தேர்வு பிரிக்கப் பட்டுள்ளது. ஐம்பத்துநாலு மேற்பார்வையாளர்கள் தேர்வை நடத்துதற்கு உதவி செய்வார்கள். ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள தேர்வுககுத் தோற்றுகிறார்கள். தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்குத் தங்கப் பதக்கங்களும், வெள்ளிப் பதக்கங்களும், சான்றிதழ்களும் கொழும்பில் நடைபெறும் தமிழ்மறைக்கழகத்தின் ஐந்தாவது திருக்குறள் மாநாட்டில் திருவள்ளுவர் திருநாளாகிய 11-6-57-ல் வழங்கப்படும்.

தேர்வுக்குத் தோற்றுபவர்கள் யாவருக்கும் நுழைவுச் சீட்டுக்கள் அனுப்பப் பட்டாயிற்று. கிடைக்காதவர்கள் தமிழ்மறைக் கழகத்துக்கு உடனே எழுத வேண்டும் என்று தமிழ்மறைக்கழகச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

# 6000 மைல் சுற்றுப்பிரயாணம்

## —இந்தியாவில் 35 நாட்கள்—

குறைந்த செலவு    நிறைந்த வசதி

சயன — போசன — ஸ்நான வசதிகள் உள்ள
புகையிரத வண்டியில் 2500-ம் ஆ.
புத்த ஜயந்தி மலிவுச் சீட்டு

திருச்சி, பங்களூர், மைசூர், பூனா, பம்பாய், எல்லோரா, அஜந்தா, ஸாஞ்சி, ஆக்ரா டெல்கி — மதுரா, பிருந்தாவனம், லக்னோ, கான்பூர், அலகபாத், பனாரஸ் (காசி), கயா, கல்கத்தா, சித்தரஞ்சன், பூரி, மதராஸ் முதலிய இடங்கள்.

கட்டண விபரம்

( இரு நேர தாவர போஜனம் உட்பட )

| | |
|---|---|
| முதலாவது வகுப்பு | ரூபா 625-00 |
| இரண்டாவது வகுப்பு | 475-00 |
| மூன்றுவது வகுப்பு | 325-00 |

புறப்படும் தேதி இலங்கையிலிருந்து 15-4-57

(விண்ணப்பம் 24-3-57 ன் முன்பே சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

முழு விபரம்:

**விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பறேஷன்**

(பிரயாண வசதி செய்பவர்கள்)

31, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
(பெரியகடைச் சத்திரத்திற்கு மேற்குப் பக்கம்)

தந்தி: "SRIVEL"


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

ஊர்காவற்றுறை பதலோமியோ பேதுறுப்பிள்ளை — வழக்காளி

எதிராக

இல M. B. 437

எதிராக

1 ஊர்காவற்றுறை மேற்கு கணபதிப்பிள்ளை செல்வராசா
2 டிையூர் பெண் கவுரியம்மா இப்பொழுது சின்னர் விசுவலிங்கத்தின் மகள் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 437-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ம் ஞு பங்குனி மீ 23 ம் உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 3063/30-ம் ரூபா: 2000/=கு 24-8-55 தொடக்கம் 27 - 10 - 55 வரை 10 வீதமான வட்டியும் அதன்மேல் மூழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 226/30 சதம். கோட்டுச் செலவில் ரூபா: 125/=ம் வட்டி முதலில் ரூபா: 1000/=மும் அறவுபண்ணப்பட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பனிறை "திமிலகுள அடைப்பு" பர. நீ இல- ஒன்றேகால் ($1\frac{1}{4}$) கல்வீடுகளும். எல்லை கிழக்கும் வடக்கும் ரோட்டு, மேற்கு கதிர்காமர் நாகமணிக்குரியவாதனம், தெற்கு நடராசா தர்மலிங்கத்திற்குரியவாதனம். இதடங்கலும் பதிவு C 252/283.

காரைநகர்:
1957ஞு தைமீ 31-ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

# ஓர் வேண்டுகோள்

## சிதம்பரம்
## ஸ்ரீ நடராசப்பெருமான் திருக்கோயில்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தன்மேலாம்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம்பலத்து ணின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

பஞ்சலிங்கத் தலங்களுள் ஆகாசலிங்கத் தலமாக எங்கள் தாய் நாடாகிய பரதகண்டத்தின்கண் விளங்குவது தில்லையாகும். இது சோழநாட்டிலுள்ளது. எங்கள் உடம்பிற்கு இருதயம்போல இவ்வண்டத்துக்கு இருதயமாக விளங்குவது இத்தலம். இத்தலம் தரிசிக்க முத்தி கொடுப்பதாகும். கோயிற் புராணம். சிதம்பர புராணம், தில்லைவன புராணம், ஏமசபாநாதபுராணம், புண்டரீக புராணம் முதலிய புராணங்களில் இந்தத் தலத்தின் மான்மியங்களைப் பரக்கக் காணலாம். சிவஸ் தலங்களுள் கோயில் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டழைக்கப்படுவது இத்தலமேயாகும்.

தேவர்கள் வியாக்கிரபாதர் பதஞ்சலிமுனிவர் திருமுறையாசிரியர்கள் வேந்தர் அமைச்சர் முதலிய யாவரும் இத்தலத்தின்கண் நடராசப்பெருமான் புரியும் ஆனந்தக்கூத்தினைத் தரிசித்து இம்மை மறுமை யின்பங்களை யடைந்தனர்.

இந்தத் தலத்தில் ஸ்ரீநடராசப்பெருமான் மக்களுக்குத் தரிசனமளிப்பதற்கு ஐந்து அங்கங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று பிரசித்தி பெற்ற ஆயிரக்கால் மண்டபமாகும். ஸ்ரீ நடராசப் பெருமான் தமது அருட் சக்தியாகிய சிவகாமியம்மையாருடன் அடியார்களுக்கு ஒவ்வொரு வருடமும் இருமுறைகளில் ஆனி உத்திரத்திலன்றும் மார்கழித் திருவெம்பாவைப்போதிலும் இம்மண்டபத்தில் தரிசனம் அளிப்பார். இம்மண்டபம் மூன்றுவது குலோத்துங்க சோழராசாவினுல் இரண்டாவது நூற்றுண்டில் புதுப்பிக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது. தெய்வச் சேக்கிழார் தமது 'பெரிய புராணம்' என்னும் சைவத் தெய்வப் புராணத்தை இவ்வாயிரக்கால் மண்டபத்திலிருந்து இயற்றினுரெனவும் அழியாப் புகழ்படைத்த பதஞ்சலிமுனிவர் தமது வியாகரண மகா பாஷ்யப் பாடத்தை தமது ஆயிரஞ்சீடர்களுக்கு இங்கிருந்தே உபதேசஞ் செய்தாரெனவும் சொல்லப்படுகின்றது. அடியார்கள் சமய சம்பந்தமான விஷயங்களையும் தத்துவ சாஸ்திரங்களையும் இம் மண்டபத்தில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். 340 அடி நீளமும் 140 அடி அகலமும் கொண்டுள்ள இம் மண்டபம் இப்பொழுது பல பாகங்களில் பழுதடைந் திருக்கின்றது சிதம்பராலயத்தின் மற்றைய பாகங்களில் வேண்டிய திருத்தங்களைச் செய்து, சென்ற 1955ம் ஆண்டு ஜூலாய் மாசம் 7-ந் தேதி சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகத்தை அத் தலத்தில் செய்தற்கு உதவியாகவிருந்த ஸ்ரீ சபாநாயகராலய புனருத்தாரணச் சபை திருவருளை முன்னிட்டு இம் மண்டபத்தைத் திருத்திப் புனருத்தாரணஞ் செய்ய முன்வந்திருக்கின்றது.

இத் திருப்பணிக்கு ஏறக்குறைய 2 இலட்சம் ரூபா தேவையாயிருக்கிறது. ஈழநாட்டிலுள்ள சிவனடியார்கள் இத்திருப்பணிக்குப் பணம் அனுப்புதல் சிறந்த சிவபுண்ணியமாகும், இக்கால அரசாங்கக் கட்டுப்பாடுகளின்படி அவர்கள் தனித்தனி பணம் அனுப்புதல் மிக்க கஷ்டமாயிருக்கும். இத் திருப்பணிக்குத் தங்களாலியன்ற பணமுதவ விரும்புகின்றவர்கள் தங்கள் பணத்தினை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தனாதிகாரிக்கு அனுப்பி வைத்தால் அவர் அரசினரிடம் உத்தரவுபெற்றுச் சேரும் பணத்தை ஒரே தொகையாக ஸ்ரீ சபாநாயகராலயப் புனருத்தாரணச் சபைத் தனாதிகாரிக்கு அனுப்பி வைப்பார். ஆனபடியால் அன்பர்கள் தங்கள் பணத்தைச் சுணக்காது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தனாதிகாரிக்கனுப்பி வைப்பார்களாக.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
5-3-57.

**மு. மயில்வாகனம்,**
சமயப்பிரசார அமைச்சர்.

M, 482 5-3-57

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ண ... கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 10—3—57 —— 16—3—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இன்னமும் சிறிது காலத்துக்குக் கருமங்கள் ஒழுங்கில்லாமலே தொடர்ந்திருக்கும். மனச் சமாதான மிருக்கமாட்டாது. வரவு செலவைச் சமாளிக்க வருத்தப்படுவீர். வாக்கு வாதங்களையும் சண்டைகளையும் தவிர்க்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பணநிலைமைகளும் குடும்ப நிலைமைகளும் சிறிது திருந்த வேண்டும். இடைஞ்சல்களிலிருந்து நீர் நீங்கக்கூடியதாயிருக்கும். ஆனுல் தேகசுகம் சிக்கலாயிருக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

ஒரு அளவுக்கு நல்ல வாரம். பிதாவழி இனத்தவர் அதிக உதவியாயிருப்பர். பெண்ணின நண்பர் மூலம் இன்பத்துக்குமிடமுண்டு. வாரஇறுதியில் காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இலாபங்களுக்குமிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

ஒரு உரத்த எதிர்ப்பை நீர் இந்த வாரம் முன்னிடவேண்டி வரும், உம்முடைய கருமங்களில் திடமாய் நிற்கவும். அப்பொழுது நீர் சித்தியடைதல் நிச்சயம், நண்பர்களைப் பிழையாக விரைந்து நினைக்கவேண்டாம்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம். ஆனுல் நீர் வெற்றிபெறுதல் நிச்சயமானபோதிலும் கந்தோரில் தொந்தரவுகளுக்கும் சண்டைகளுக்குமிடமுண்டு. சிறுஅபாயங்களுக்கும் இடமில்லாமலில்லை.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உம்முடைய கருமங்களில் இந்த வாரம் நீர் விரும்பியபடி செய்ய முடியாது. அதிக எதிர்ப்பும் கண்டனங்களு மிருக்கும். தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்க மாட்டாது. ஆனுல் பணத் துறையில் ஒரு அளவுக்கு நல்லவாரம்.

**துலாம்** சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

முன் அரைவாரம் தொந்தரவானதாயிருக்கும். நீர் இடைஞ்சல்களை நீக்க முயலவேண்டி யிருக்கும், ஆனுல் புதன்கிழமையின் பின் நிலைமைகள் திருந்தும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

சுகவீனங்களுக் கிடமுண்டு. ஞாயிறுடன் திங்கள் இளைப்புண்டாக்கக்கூடும். சண்டைகளையும் பிழை எண்ணங்களையும் தவிர்க்கவும். வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்.

**தனுராசி** மூலம் பூராடம் உததராடம், 1ம் பாதம்,

தேகசுகத்திலும் உம்முடைய சொந்தக் கருமங்களிலும் திருத்தம் நிச்சயம். ஆனுல் செவ்வாயையும் புதனையும் கவனமாய்க் கழிக்கவும். பின் அரை வாரம் மிக நல்லாயிருக்கும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

முன் அரைவாரம் நல்ல பலனைத் தரும். உத்தியோக சித்தியும் புகழும் நிச்சயம். வியாழன் வெள்ளி சனி காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும். சண்டைகளைத் தவிர்க்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

சனிக்கிழமை தவிர இந்தவாரம் நல்லதா யிருக்கும். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். புகழும் சமூகசித்தியும் நிச்சயம். சில நீண்டகாலமான சிக்கல்கள் நீக்கப்படும்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

உத்தியோககருமங்களுக்கு அல்லது வியாபார கருமங்களுக்கு ஒரு நல்ல வாரம். ஆனுல் உமக்கு மனச் சமாதான மிருக்கமாட்டாது, சொந்தக் கருமங்களும் குழப்பமாயிருக்கும். வார இறுதியில் தனலாபம் நிச்சயம்,

## குன்றக்குடி அடிகளின் வருகை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பூஜ்ய விநோபாஜி இங்கு வந்தபோது அடிகளாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்கள். அடிகளார் அவர்கள் மடம், தேவஸ்தானம் ஆகிய காரியங்களின் நிருவாகத்தை நடத்துவதற்கு திறமை வாய்ந்த ஒருவரை நியமித்துவிட்டு பூமிதான இயக்கம், சமூக முன்னேற்றம் முதலிய விஷயங்களில் அதிகமாக ஈடுபடவேண்டும் என விநோபாஜி கேட்டுக்கொண்டார்கள்.

விநோபாஜியின் ஆலோசனைப்படி அடிகளார் அவர்களும் மடம், தேவஸ்தானம் ஆகியவைகளின் காரியங்களை நடத்தி வருவதற்கு மட்டுமே ஒருவரை நியமனம் செய்யச் சம்மதித்தார்கள். இதன் மத்தியில் மடம், தேவஸ்தானம் ஆகியவைகளுடைய நிர்வாகத்தை ஒப்புவிக்கும் எண்ணத்தைச் செயல் முறைக்குக் கொண்டுவர வேண்டாம் என்று பல கடிதங்களும் தந்திகளும் அடிகளாரின் சீடர்களிடமிருந்து வந்திருக்கின்றன........

மேலே கண்ட விஷயங்களினுல் பொதுமக்களையும் சிஷ்ய கோடிகளையும் இது சம்பந்தமாக யாதொரு கவலையும், குழப்பமும் அடைய வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலே கண்டவிதம் உள்ள நடவடிக்கையை யாரோ வேண்டும் என்று திரித்து அடிகளார் துறவறத்திலிருந்து விலகி விடுகிறுர் என்று தோகிறது என விஷமப் பிரசாரம் ஆகும்படி எழுதியிருக்கிறுர்கள். இச்செய்தி முற்றிலும் தவறுனது என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

—கடித

## அரசியல் அலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளர்களின் மனப்பான்மையை வெளியுலகம் அறிந்தால் இந்நாட்டிற்கு எவ்வளவு இழுக்கு வரும் என்று பிரதமரும் அவரின் அருமை நண்பர்களும் அறிவதாகக் காணப்படவில்லை.

கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டங்கள் குழப்பத்தில் முடிவதற்கு யார் காரணர் என்றதைம. ஐ. முன்னணியார் வெளிப்படுத்துவார்களா?

கந்தசாமியும் செல்லையாவும் கல்விப்பகுதியில் ஆசிரியர்களாக இருக்கின்றுர்களென்று அந்தக் காலி அங்கத்தவர் திரு தகநாயக கேலியாய் நடித்து வகுப்புவாதத் தீயை வளர்ப்பது ம. ஐ. முன்னணியின் வகுப்புவாத மரபாய் விட்டதே.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 865
1. குமாரசாமி சிவஞானசுந்தரம்
2. பெண் தங்கரத்தினம்
பிள்ளையார் கோவிலடி
சிவியாதெரு
வழக்காளிகள்

எதிர்

சின்னத்தம்பி நாகமணி கைம்பெண் வள்ளியம்மை
வில்வம்தெரு
சிவியாதெரு
எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் M B 865 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957௵ சித்திரை ௴ 24 உ புதன்கிழமை பிற்பகல் 4–30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபாய் 1625/60 இத்துடன் ரூபாய் 1250 /– க்கு 2–3–56 தவக்கம் 28-6–56 வரை வட்டி 12 வீதம் அதின் பின் கூடிய தொகைக்கு பணம் கொடுக்கும் வரைக்கும் ஐந்து வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 184–80.

காணி விபரம்

யாழ்ப்பாணம் கண்டிக்குளியைச் சேர்ந்த சிவியாதெருவில் "புங்கடியிற்புலம்" என்னும் காணி ரீ. இ. 2½ வீடும் வான் பயிர் செய்பயிர்களும்.

எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் நல்லம்மாவின் ஆதனம்.

வடக்கு நடராசா பெண் கனகம்மாவின் ஆதனம்.

மேற்கு அப்பாக்குட்டி பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம்

தெற்கு கை ஒழுங்கை ருகப்பு காலுமுழம் அகலமுள்ள (ரேட்டிலிருந்து காணிக்கும் போகும் ஒழுங்கை) கந்தையா பெண் அம்பினியின் ஆதனம்.

இவை அடங்கிலும் கை ஒழுங்கை குளி 2 1/2 யும் கை ஒழுங்கைக்கு மேற்குப் பிறமாக இருக்கும் கிணற்றில் பங்கும்.

வ, அ. துரையப்பா
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
4–3–57.
M. 481 8-3 (து 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல MB 313
கந்தையா கனகரத்தினம்
கந்தர்மடம், வண்ணைக்கு
வழக்காளி.

எதிர்

1. கிறிஸ்ணபிள்ளை
துரைசிங்கமும் பெண்
2. ஈஸ்வரியம்மா — நல்லூர்
யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 313ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1957௵ சித்திரை ௴ 23ம் உ (23-4-57) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைக தொகை:– ரூபா. 5490–62. 21-6-1955 தொடக்கம் 22–9-55 முடிய ரூபாய் 3500/- க்கு பததுவீத வட்டியும் அதன்பின் ஐந்துவீத வட்டியும் கோட்டுச் செலவு 253–15 இதில் ரூபா 150/– கொடுபட்டது.

காணி விபரம்

யாழ்ப்பாணம் நல்லூரில் கயிலாயஉடையான் வளவு என்னும் காணி ரீ இ 4. 5/48. பயிர்களும் கிழக்கெல்லை காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

எல்லை கிழக்கு சண்முகம் பிள்ளை பெண் இராசம்மாவின் ஆதனம்.
வடக்கு ஒழுங்கை
மேற்கு ஒழுங்கை
தெற்கு குளம்
இவை அடங்கிலும்.

கோப்பாய் தெற்கில் காலிங்கருயன் வயல் இரண்டு பிரிவுகள் நெ. இ 15.

எல்லை கிழக்கு விசுவநாதர் வேலுப்பிள்ளையின் உருத்தாளர்.

தெற்கு செல்லப்பா கணபதிப்பிள்ளையும் கனகசபை கைம்பெண் சொர்னம்மாவும்.

மேற்கு நல்லூர் கிராமஎல்லை.

வடக்கு செல்லப்பா கணபதிப்பிள்ளை. இவை அடங்கிலும்,

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
18-2-57.
M 470 8-3-57 (து. 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
டிஸ்திறிக் கோட்டில்
தத்துவ வழக்கு இல. 30/T
காலஞ்சென்ற மட்டுவில் தெற்கு
சின்னததம்பி சின்னையாவின்
ஆஸ்தியின் விஷயமாக,
மட்டுவில் தெற்கு
மாரிமுத்து சின்னத்துரை
தத்துவகாரன்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் 30/T இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப் பிரகாரம் கீழ்க்குறிக்கப்படும் ஆதனங்கள் 1957 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அவ்வக் காணிக்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன டாப்பு

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக்கோவிற்பற்று மட்டுவில் தெற்கிறை. "சூளைப்பிட்டி வளவு" நிலப்பரப்பு 13. எல்லை: கிழக்கு காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னையாவின் உரித்தாளருக்குரிய ஆதனம். வடக்கு சுவாமிநாதர் கைம்பெண் சின்னுச்சிக்குரிய ஆதனம், மேற்கு ரேட்டு, தெற்கு கையொழுங்கை. விலை மதிப்பு ரூபாய் 7250–00.

(2) ஷை மட்டுவில் தெற்கிறை "கந்தர் வளவு நிலப்பரப்பு 13 எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை மாணிக்கத்துக்குரிய ஆதனம் வடக்கு வீரசிங்கம் இளையதம்பிக்குரிய ஆதனம், மேற்கு முருகேசு இளையதம்பிக்குரிய ஆதனம். தெற்கு ரேட்டு இதிற் சொரியலாய் 5/6 பங்கு. விலை மதிப்பு ரூபாய் 650-00.

(3) ஷை மட்டுவில்தெற்கிறை "கொடிச்சாட்டி வயல்" நெற்பரப்பு 20. எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சின்னத்தம்பிக்குரிய ஆதனம். வடக்கு ஆறுமுகம் சின்னத்தம்பிக்குரிய ஆதனம். மேற்கு வாய்க்கால், தெற்கு மருதடிப்பிள்ளையார் கோவிலுககுரிய ஆதனம். விலை மதிப்பு ரூபாய் 2000-00.

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்
(ஏல விற்பனையாளர்)
சாவகச்சேரி,
15–2–57:
M. 480 8-3-57 (து 100)

## நாவலர் கழகம் ஆனியில் ஆரம்பம்

சர்வ கலாசாலை இயக்கத்தினரின் நன் முயற்சியால் உயர்தரக் கல்வி கற்கும் மாணவருக்கு உதவும் பொருட்டு நாவலர்கழகம் எனப் பெயரிய கல்லூரி வருகிற ஆனி (ஜூன்)மாசம் ஆரம்பிக்கக்கூடுமாம். வேதனமின்றியே தொண்டாற்றுதற்குப் பேராசிரியர்கள் முன்வந்திருப்பதாக இத்தொடர்பிற் குறிப்பிடப்படுகின்றது.

உ

## கச்சியப்ப சிவாசாரியர் திருநாள்

நாள்: துர்முகி௵ மாசி ௴ உ௭ உ (10–3–57) ஞாயிற்றுக்கிழமை.

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு 6½–7½ கடவுளாராதனை

தமிழ்மறையோதல்
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்

7½ — 8½ பிரசங்கம்

விஷயம்:
**'கந்தபுராணத்தின் மகிமை'**

விரிவுரையாளர்
திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் B A ; B Sc.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 6–3–57.

## தமிழரை எதிர்ப்பதில் மற்றொரு வேடம்

தமிழ்க்கடைகளைப்பகிஷ்கரித்துத் தமிழ் மக்களை எதிர்க்கும் இயக்கமொன்றை நடத்த சிங்கள ஜாதிக பெரமுனையார் முன்பு தீர்மானித்திருந்தனர். முதல் மந்திரி இவ் வியக்கத்துக்குத் தமது எதிர்ப்பைத் தெரித்தார். ஆகையினலே குறித்த தமிழரை எதிர்க்கும இயக்கத்தைத் தனிப்பட்டமுறையிலே நடத்தச் சிங்கள ஜாதிக பெரமுனையார் இப்பொழுது தீர்மானித்திருக்கின்றார்களாம்.

## ஆசிரியர்களுக்குப் போட்டித் தடை

சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளிற் கற்பிக்கும் உதவி ஆசிரியர்கள் கிராமச் சங்கப் போட்டிகளில் ஈடுபடக் கூடாதென்றும் அங்கத்தவர்களாயிருக்கக்கூடா தென்றும் ஒரே இடத்தில் ஐந்து ஆண்டுகளுக்குமேல் கடமையாற்றிய தலைமையாசிரியர்கள் மாத்திரம் கிராமச்சங்கப் போட்டிகளில் ஈடுபடலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளனராம். கிராமங்களில் நடக்கும் சைவக்கல்விக்கும் கிராம மக்களின் ஒற்றுமைக்கும் பங்கமுண்டாக்காமற் செய்வதே இத்தடையின் நோக்கமாகும் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

### அணிந்துரை அரங்கம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

## திருவிசைப்பா திருப்பல்லாண்டு

திருவிசைப்பா என்பது சைவத் திருமுறைகள் 12ல் ஒன்பதாகத் திகழும் தோத்திரநூல். இதைப் பாடியவர் ஒன்பதின்மர். இது தேவாரம்போல் சில தலங்களின் மேல் பின்வந்தவர்களால் பாடப் பெற்றது. இதனேடு சேர்ந்தனர் சிதம்பரநாதர்மீது பாடிய திருப்பல்லாண்டுப் பதிகமும் இணைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தப் பதிகங்கள் 29. இவற்றிற் கெல்லாம் 35 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் வசித்த காஞ்சி இராமசாமிநாயுடு என்னும் தமிழ் வித்துவான் உரை வெளியிட்டனர். அவர் சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரத்திற்கும் மற்றும் பல கோவைகளுக்கும் உரை எழுதினர். அதனல் அவர் மாணவர் நமச்சிவாய முதலியார் முதலியோர் அவரைக் கோவை நாயுடு என்பர். நாயுடு, நாவலர் சென்னையிலிருந்தபோது அவர்களிடம் திருக்கோவையார் திருக்குறள் பாடங் கேட்டதாகக் கூறுப.

பல்லாண்டிற்கு முன் இம்மகாவித்துவான் எழுதி வெளியிட்ட திருவிசைப்பா திருப்பல்லாண்டுரை மறைந்தபடியால் அதை நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு புதுப்பிக்கலாயிற்று. சிவநேயர் இவ்வுரை நூலை ஆதரித்துச் சிவபுண்ணியம் தேடுவாராக.

பிரதி விலை ரூபா 2/=
சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை
4–2–57.


## யாழ்ப்பாணம் ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


## அடைவுநகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், சிதாரி சப்பல்தெரு, 9-ம் நம்பர் வீட்டில் அடைவு பிடிப்பவர்களாகிய யோசேப் அன் கோ. மனேஜர், எஸ். பி. யோசேப் அவர்களிடம் 1954ம் ஆண்டு சித்திரை மாதம் 30–ந் திகதி தொடக்கம் 1955ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதி வரையில் வைக்கப்பட்டுத் தவணை தப்பிய அடைவு நகைகள் 1957-ம் ஆண்டு பங்குனி மாதம் 22ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இடாப்பு மேற்படி இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Konamalai Ayadurai
கோணமலை ஐயாத்துரை
வெந்தீஸ் மேஸ்தர்

யாழ்ப்பாணம், 28-2–57.

M 476 1, 8-3–57.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 8-3–57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.